இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 242 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 30 – திங்கள்கிழமை 13 ஏப்ரல் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 242 : Thiruvalluvar Year - 2057 - Panguni 30 - Monday 13 April 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## வீரத்தின் விளைநிலமாம் – சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூரில், திரும்பிய பக்கமெல்லாம் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்கள், கழகத் தலைவர் அவர்களின் உணர்ச்சிமிகு உரை கேட்டு மகிழ்ந்த காட்சி!



### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அரசே குற்றவாளிக் கூண்டில் நிற்கிறது! தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு பற்றிப் பேச

# பா.ஜ.க. தலைவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது!



### சிவகங்கை மாவட்டம் – திருப்பத்தூர் – பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் –

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**திருப்பத்தூர், ஏப்.13 -**

**சிவகங்கை மாவட்டம் - திருப்பத்தூரில், நேற்று முன்தினம் (11.4.2026) மாலை, மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்குகள் கேட்டு நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் எழுச்சியுரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அரசே குற்றவாளிக் கூண்டில் நிற்கிறது; தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு பற்றிப் பேச பா.ஜ.க. தலைவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்றும்,**

**"அருமையான வாக்குறுதிகளை கொடுத்திருக்கும் இந்த ஸ்டாலின் ஆட்சி வேண்டுமா? பெண்கள் பற்றி தரக்குறைவாகப் பேசும் பழனிசாமியின் ஓனரான N.D.A. ஆட்சி வேண்டுமா?" என்றும் குறிப்பிட்டார்.**

**கழகத்தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

சிவகங்கை மாவட்டம் என்றால், என்ன ஸ்பெஷல்? காரசாரமான சாப்பாடு; பாரம்பரிய மாளிகை வீடுகள் கொண்ட செட்டிநாடு! திருப்பாச்சேத்தி அருவா! காளையார்கோவில் சிற்பம்! பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில்! பிரான்மலை ஷேக் ஒளியுள்ள தர்கா, இடைக்காட்டூர் தேவாலயம் என, திரும்பும் பக்கமெல்லாம் சிறப்புக்குரிய மாவட்டம், இந்த சிவகங்கை!

சிறப்புக்குரிய இந்த சிவகங்கை திராவிட மாடல் 2.0-க்கு ரெடியா? ('ரெடி' என மக்கள் குரல் எழுப்பி ஆரவாரம்) மகிழ்ச்சி!

**'மானம் காத்த மருதிருவர்' வாழ்ந்த மண்!**

இந்த சிவகங்கை மண்ணுக்கு வரும் போதே, என்னுடைய உடல் எல்லாம் சிலிர்த்தது. காரணம் என்ன தெரியுமா? முத்து வடுகநாத பெரிய உடையாத்தேவர், வீரமங்கை வேலுநாச்சியார், வெள்ளச்சி நாச்சியார் என வாழையடி வாழையாக, குடும்பம் குடும்பமாக தாய்நாட்டுக்காகப் போராடிய மண்! மானம் காத்த மருதிருவர் எனப் போற்றப்பட்ட மருது சகோதரர்களின் மண்! உயிருக்கு அஞ்சாமல் உடலில் நெருப்பைக் கட்டிக் கொண்டு ஆயுதக் கிடங்கில் குதித்த வீரத்தாய் குயிலி வாழ்ந்த மண்!

**நம் தாய்மடி, 'கீழடி' இருக்கும் மண்!**

எல்லாவற்றிற்கும் மேல், நான் சட்டமன்றத்தில் தலைநிமிர்ந்து அறிவித்தேனே, இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும் என்று, பெருமிதத்தோடு சொல்ல வைத்திருக்கும் "நம் தாய்மடி கீழடி" இருக்கும் மண்!

இத்தனை சிறப்புகள் இருக்கும் காரணத்தினால், கடந்த 5 ஆண்டுகளில் அதிக முறை சிவகங்கை மாவட்டத்திற்கு வந்து கொண்டே தான் இருந்தேன். இங்கு வந்தவுடன் என் நினைவுக்கு வந்தது, காரைக்குடியில் மரியாதைக்குரிய அண்ணன் ப. சிதம்பரம் அவர்கள் தன் தாயார் பெயரில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் அமைத்திருக்கும் நூலகத்தைத் திறக்க வந்தேன். அன்றே, ஆதிதிராவிட நல மாணவிகள் விடுதிக்கு திடீர் ஆய்வுக்குச் சென்றேன்.

ஒக்கூரில் இலங்கைத் தமிழர் முகாமில் ஆய்வு,

மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம்.

அதுட்டுமல்ல, 6 மாதங்களுக்கு முன்பு, இடைக்காட்டூரில் இருக்கும் பழமை வாய்ந்த திரு இருதய ஆண்டவர் தேவாலயத்துக்கு வந்து மராமத்துப் பணிகளைத் தொடங்கி வைத்தது, அரசு நலத்திட்ட நிகழ்ச்சிகள்,

**காரைக்குடியில் 'மினி டைடல்' பார்க்,**

**அரசு சட்டக் கல்லூரிக் கட்டடத்தின் திறப்பு விழா,**

**செட்டிநாட்டில் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் திறப்பு விழா,**

**2 ஆயிரத்து 119 கோடி ரூபாய் மதிப்பிலான மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்,**

**அண்ணல் காந்தியும் - தோழர் ஜீவாவும் சந்தித்த சிராவயலில், சிலையுடன்கூடிய அரங்கம் திறப்பு விழா,**

**கவிஞர் முடியரசனார் சிலை திறப்பு,**

**தந்தை பெரியாரும் - தலைவர் கலைஞரும் போற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு நினைவு கல்வெட்டு நிகழ்ச்சி - இன்னும் நிறைய இருக்கிறது.**

அமைச்சர் பெரியகருப்பனும், அண்ணன் சிதம்பரம் அவர்களும், என்னுடைய சகோதரர் கார்த்தி சிதம்பரமும் உங்கள் மாவட்டத்துக்கு அவ்வளவு திட்டங்களை என்னிடம் எடுத்துச் சொல்லி, அதற்காக விழாவும் நடத்தியிருக்கிறார்கள்.

> **'காவிப் பொய்'!**
>
> **ஒன்றிய அரசின் அனைத்து தரவரிசையிலும் தமிழ்நாட்டுக்கு முக்கியமான இடமும், ஏன் பல அமைச்சகங்களின் விருதுகளும் வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் தெரிந்தும், தமிழ்நாட்டுக்குப் பிரச்சாரம் செய்ய வந்திருக்கும், ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள், "தமிழ்நாட்டின் வளர்ச்சி நாளுக்கு நாள் பின்னோக்கிப் போகிறது" என்று, உளறிவிட்டு – பிதற்றிவிட்டுச் சென்றிருக்கிறார். பச்சைப் பொய் கேள்விப் பட்டிருக்கிறோம்! இது அதற்கும் மேல், கடைந்தெடுத்த 'காவிப் பொய்'!**

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்